2002 மே 9]

**322—**

### கலைக் கல்லூரி

***2667—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூரில் அரசு கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் தற்போதைய நிதிநிலைமையின் காரணமாக வருகிற கல்வியாண்டில் புதிய அரசு கலைக் கல்லூரிகள் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே அரூரில் அரசு கலைக் கல்லூரி தொடங்க வாய்ப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் என்பது தருமபுரி மாவட்டத்தில் அடங்கிய ஒரு தொகுதியாகும். அந்தத் தொகுதி முழுக்க நீண்ட நெடிய காலம் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு எந்தவிதமான வேலையும் இல்லாமல் மிகவும் பெரிய அளவிலே கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகள் கூட மேட்டு நில விவசாயிகள்தான். அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால் கிட்டத்தட்ட 50, 60 கிலோமீட்டர் தொலைவிலுள்ள சேலம் அல்லது தருமபுரி மற்றும் அதே அளவு தொலைவிலுள்ள கிருஷ்ணகிரி, அதே சமஅளவு தூரத்திலுள்ள திருவண்ணாமலை போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கு எந்தவிதமான கல்வி வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இதுவரை எந்த அரசாலும்— இதற்கு முந்தைய அரசால்கூட செய்யப்படவில்லை. எனவே இந்த அரசு இந்த ஆண்டு இல்லையென்று சொன்னாலும், அடுத்த ஆண்டிலாவது அரூரிலே ஓர் அரசு கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை உருவாக்கித் தரமுடியுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 மே 9

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு மாவட்டமாகும். அது உண்மைதான். அங்கிருக்கும் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே நல்ல கல்வி நிலையை உருவாக்குவதற்கு அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் நான்கு அரசு கலைக் கல்லூரிகள் செயல்படுகின்றன. தருமபுரி, கிருஷ்ணகிரியில் இருக்கின்றது. அதேபோல பர்கூரில்கூட ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியானது அரூருக்கு அருகில் இருக்கிறது. கிருஷ்ணகிரிகூட பர்கூர் அருகிலுள்ள ஒரு பகுதிதான். பிறகு சேலத்திலேயிருந்தும் அந்த மாவட்டத்திற்கு மாணவர்கள் செல்வது உண்மைதான். அதோடு அரூரில் சுயநிதிக் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, பெண்களுக்காக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது இருக்கும் பொருளாதார நிலையைக் கொண்டு இந்த ஆண்டு அங்கு ஆரம்பிப்பதற்கு எந்த வாய்ப்பும் கிடையாது. நமது அரசினுடைய நிதிநிலை முன்னேற்றமடைந்தால், நல்ல வாய்ப்பு ஏற்பட்டால் அதற்கு ஏற்றாற்போல் கோரிக்கையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 323, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**323—**

**பட்டயப் படிப்பு**

***5465—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம், சிற்பக் கலைக் கல்லூரியில் பட்டயப் படிப்புகளை கல்லூரி நிருவாகம் அகற்றியது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) மீண்டும் பட்டயப் படிப்பைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?